# தேசிய கல்வி நிறுவகம்
## ஆசிரியர் கல்வித் துறை

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி 2025/2026
## SLQF Level 8

## விண்ணப்பம் கோரல் - (தமிழ் மொழி மூலம்)

தேசிய கல்வி நிறுவகத்தினால் முன்னெடுக்கப்படும் 30 திறமை மட்டங்களைக் கொண்ட பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கான 2025/2026 கல்வியாண்டிற்கு தமிழ் மொழி மூலம் தகைமை பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1.0 கற்கை நெறியின் இயல்பு**

இக் கற்கைநெறியானது வார இறுதி மற்றும் பாடசாலை விடுமுறை நாட்களில் நடத்தப்படும் பகுதி நேர 18 மாதங்களைக் கொண்ட கற்கை நெறியாகும். அத்துடன் நிகழ்நிலை (Online) மற்றும் நேரடி வகுப்பு அமர்வுகள் (கலவைமுறைக் கற்றல் - Blended Learning) மூலமாக கல்விசார் நடவடிக்கைகள் பிராந்திய கற்கை நிலையங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும்.

**2.0 விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்**

**(i)** இலங்கைப் பிரஜையாக இருத்தல்

**(ii)** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவகம் ஒன்றின் மூலம் பெற்றுக் கொண்ட (குறைந்தது மூன்று வருடம்) பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் பெற்றுக் கொண்ட மட்டம் 7 கான NVQ சான்றிதழ்

**(iii)** அரச அல்லது அரச உதவி பெறும் பாடசாலையொன்றில் / பிரிவெனாவொன்றில் / அரச அனுமதி பெற்ற மதக் கல்வி நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் அதிபராக / ஆசிரியராக அல்லது ஆசிரிய ஆலோசகராக / இலங்கை ஆசிரிய கல்வியியலாளராக / இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரியாக / தேசிய கல்வி நிறுவகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது உயர் கல்வி நிறுவகம் ஒன்றில் கல்விசார் அங்கத்தவராக இருத்தல்

**(iv)** நிரந்தரமாகவும் தொடர்ச்சியாகவும் சேவையில் இருத்தல்

**3.0 தெரிவு செய்தல்**

விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலமாக அல்லது நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலமாக மட்டும் கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்படுவர்.

**4.0 கற்கைநெறி நடத்தப்படும் பிராந்திய கற்கை நிலையங்கள்**

| இல. | பிராந்திய கற்கை நிலையங்கள் | இல. | பிராந்திய கற்கை நிலையங்கள் |
|---|---|---|---|
| 01 | **மஹரகம** | **08** | **யாழ்ப்பாணம்** |
| 02 | **கண்டி** | **09** | **அட்டாளைச்சேனை** |
| 03 | **கொட்டகலை** | **10** | **மட்டக்களப்பு** |
| 04 | **பதுளை** | **11** | **புத்தளம்** |
| 05 | **திருகோணமலை** | 12 | **அனுராதபுரம்** |
| 06 | **வவுனியா** | 13 | **காலி** |
| 07 | **கிளிநொச்சி** | **14** | **குருணாகலை** |

**5.0** ஆகக் குறைந்தது ஐம்பது பயிலுனர்களைக் கொண்டிராத பிராந்தியக் கற்கை நிலையங்களில் கற்கைநெறி நடத்தப்படமாட்டாது. இவர்களுக்கு தமது இரண்டாவது விருப்பின் அடிப்படையில் பிராந்தியக் கற்கை நிலையம் வழங்கப்படும். விண்ணப்பதாரியினால் விருப்பு அடிப்படையிற் தெரிவு செய்த பிரதேச நிலையங்களினை எக்காரணம் கொண்டும் பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. (இது தொடர்பான இறுதித் தீர்மானம் பணிப்பாளர் நாயகம் அவர்களுடையதாகும்)

**6.0** தெரிவு செய்யப்படும் பயிலுனர்கள் 10 வாரங்கள் செய்முறைக் கற்பித்தல் பயிற்சியில் ஈடுபடுத்தப்படுவார்கள். கற்பித்தலில் ஈடுபடாத கல்விச் சேவையில் உள்ள கல்விசார் அதிகாரிகள் இதன் பொருட்டுப் பொருத்தமான பாடசாலை ஒன்றினைத் தெரிவு செய்து கொள்ளும் பொறுப்பு அவர்களைச் சார்ந்தது.

**7.0 கற்கைநெறிக் கட்டணம்**

விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1,500/= அறவிடப்படும். பதிவுக் கட்டணம் ரூபா 2,000/=, **கற்கைநெறிக் கட்டணம் ரூபா 96,000/=** ஆகும். கற்கை நெறிக் கட்டணத்தினை இரு தவணைகளில் செலுத்த முடியும். (முதலாம் தவணைக் கட்டணம் ரூபா 66,000/=, இரண்டாம் தவணைக் கட்டணம் ரூபா 30,000/=). கற்கைநெறிக்குப் பதிவு செய்யும் போது பதிவுக் கட்டணமும் முதலாம் தவணைக் கட்டணமும் ரூபா 68,000/= செலுத்தப்பட வேண்டும். இவற்றிற்கு மேலதிகமாக பரீட்சைக்கு தோற்றும் போது உரிய பரீட்சைக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டும்.

**08. விண்ணப்பிக்கும் முறை**

8.1 தேசிய கல்வி நிறுவகத்தில், ஆசிரிய கல்வி துறையின் அதிகார பூர்வ இணையத் தளமான **www.teachereducation.lk** இல் இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

8.2 மேற்குறிப்பிட்ட ஆசிரியர் கல்வித்துறையின் இணையத்தளத்தில் பிரவேசித்து அதிலுள்ள விண்ணப்பபடிவத்திற்கான கூகுள் படிவத்தினை (Google Form) பூரணப்படுத்துவதனூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

8.3 கூகுள் படிவத்தினூடாக விண்ணப்பித்த பின்னர் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு (Email) விண்ணப்பத்தின் பிரதி ஒன்று கிடைக்கப்பெறும். அதனை Print செய்து உங்கள் பாடசாலை அதிபர் மற்றும் வலயக் கல்வி பணிப்பாளர் அனுமதியுடன் விண்ணப்பக் கட்டணம் ரூபாய் 1,500/= செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டின் பிரதியையும் இணைத்து நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கும் போது குறித்த அதிகாரியிடம் ஒப்படைக்கவும்.

**09. விண்ணப்பக் கட்டணம் செலுத்தும் முறை**

**இலங்கை வங்கியின்** எந்தவொரு கிளையிலும் விண்ணப்பக் கட்டணம் ரூபாய் 1,500/= ஐ **PE25A00000A1** எனும் கொடுப்பனவு விபர இலக்கத்தினைக் (Payment Reference Number) குறிப்பிட்டு தேசிய கல்வி நிறுவகத்தின் விசேட வைப்புச் சீட்டை மாத்திரம் பயன்படுத்தி (இது BOC இல் கிடைக்கக் கூடியதாக இருக்கும்) பணத்தினைச் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளலாம். தேசிய கல்வி நிறுவகத்திற்கு செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் மீள் அளிக்கப்படமாட்டது.

**10. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு**

உங்கள் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் உங்களது **மின்னஞ்சல்** (Email) முகவரிக்கு மட்டுமே அனுப்பி வைக்கப்படும்.

**11. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 31.03.2025**

**மேலதிக விபரங்கள்**

மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரத்தில் பிற்பகல் 01.00 மணி முதல் 04.00 மணி வரை **0117-601775 / 0117-601703/ 0117-601744** என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் பெறலாம்.

பேராசிரியர் மஞ்சுளா விதானபதிரன
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்